(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 7 ]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, யூன் 23, செவ்வாய்க்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0011/ '09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்று நடைமுறையில் உள்ள சகல நேரடி மற்றும் மறைமுக வரிகளையும்,

(ii) இன்றைய விகிதங்களைப் பயன்படுத்தி, வரியின் தாக்கத்தை ரூபாவின் பெறுமதியிலும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அரிசி, சீனி, பருப்பு, பால்மா, கோதுமை மா, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், வெங்காயம், மின்சாரம், வங்கிக் கடன்கள் ஆகியவற்றிற்கு இன்றைய தினத்திலுள்ளவாறு விதிக்கப் பட்ட சகல வரிகளையும் வெவ்வேறாகவும்,

(ii) இப்புள்ளி விபரங்களின் -

(1) 1994 - ஓகஸ்ட் 15

(2) 2001 - டிசம்பர் 15

(3) 2004 - ஏப்ரல் 2

(4) 2005 - டிசம்பர் 1

(5) மற்றும் இன்றைய தினம்

ஆகிய திகதிகளுடனான ஒப்பீடு ஒன்றையும், அவர் கூறுவாரா?

(இ) இன்றைய தினத்திலுள்ளவாறான விகிதங்களைப் பயன்படுத்தி, வளப் பெறுமதி யில் வரியின் தாக்கத்தையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0097 / '09

2.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அதிமேதகு சனாதிபதியவர்களின் ஆலோசகர்களாக சேர்த்துக்கொள்ளப் பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இவ்விதமாக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளவர்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் அல்லது விசேட தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி ஆலோசகர்களுக்காக சம்பளமோ படிகளோ செலுத்தப் படுகின்றனவா என்பதையும்,

(ii) ஆமெனில், 2008 ஆம் ஆண்டுக்காக ஒவ்வொருவருக்கும் வெவ்வெறாக எவ்வளவு பணத்தொகை செலுத்தப்பட்டுள்ளதென்பதையும்,

(iii) ஆலோசகர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள ஆட்கள் அனைவருக்காகவும் 2008 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0196 / '09

3.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதுள்ள பொலிஸ்மா அதிபரின் முழுப்பெயர் மற்றும் அவர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி என்பவை யாவையென்பதையும்,

(ii) இவரது பதவிக்காலம் எப்போது முடிவடைகின்றது என்பதையும்,

(iii) குறிப்பிட்ட பொலிமா அதிபரை இப்பதவிக்கு நியமித்தவர் யார் என்பதையும்,

(iv) பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஒருவரை நியமனம் செய்ய வேண்டியவர் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பொலிஸ் அதிபரின் நியமனம் சட்டபூர்வமற்றதென அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) இன்றேல், ஏன்?

0255 / ' 09

4.

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'அபி வெனுவென் அபி' நிதியம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இற்றைவரை இந் நிதியத்துக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட தொகை யாது,

(ii) இந்நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் ஆட்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளினால் வழங்கப்பட்ட தொகை யாது,

(iii) 'அபி வெனுவென் அபி' நிதியத்துக்காக நிதி வழங்குமாறு மக்களைக் கோருவதற்காக மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கைகள் யாவை,

(iv) இப்பிரசார நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் எவ்வளவு,

(v) இப்பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்ட நிறுவனங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நிதியத்திலிருந்து இற்றைவரை செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு,

(ii) இந்நிதியத்தினால் முப்படை அல்லது பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கான வீடுகள் எங்கு அமைக்கப்பட்டுள்ளன

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவ்வீடுகளில் எத்தனை இற்றைவரை முப்படை வீரர்களுக்கு அல்லது பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன,

(ii) இந்நிதியத்தினால் கட்டப்படும் வீடுகள் வழங்கப்படும் முறைமை, விபரமாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0348 / '09

5.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, உடுகம கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் 2008 ஆம் ஆண்டு கல்வி பொது தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றிய பாடசாலைகள் எவை என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை, அவர்களுள் சித்தி அடைந்தோரின் எண்ணிக்கை மற்றும் சித்தியடைந்தோரின் வீதம் எவ்வளவு என்பதையும்,

(iii) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை அந்த பாடசாலைகளில் உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற் குறிப்பிட்ட கல்வி வலய பாடசாலைகளுள் 2008 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர பத்திர (சாதாரண தரப்) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றிய பாடசாலைகள் எவை என்பதையும்,

(ii) அந்த ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தோற்றியவர்களின் எண்ணிக்கை மற்றும் சித்தியடைந்தோரின் எண்ணிக்கை சித்தியடைந்தோர் வீதம் எவ்வளவு என்பதையும்,

(iii) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை அந்த பாடசாலைகளில் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்தோர் எத்தனை வீதம் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) ஒட்டு மொத்தமாக மேற்கூறிய கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கல்விப் பொது தராதரம் மற்றும் உயர்தர கல்வி அபிவிருத்தியில் படிப்படியான வீழ்ச்சி அல்லது படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) கல்வி மட்டத்தில் ஏதேனும் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பின் அதனை நிவர்த்தி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0356 / ' 09

6.

கௌரவ ஜினதாச கிதுலகொட,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரும் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஓய்வூதியத் திணைக்களத்தினால் நுவரெலியா மாவட்டத்தின் ரம்பொட நீர்வீழ்ச்சியை அண்மித்த பிரதேசத்தில் அமைப்பதற்கு தயாராகவுள்ள ஓய்வுபெற்றவர்களின் விடுமுறை விடுதிக்காக அனைத்து ஓய்வூதியம் பெறுநர்களின் 2009 பெப்ருவரி மாதத்திற்கான ஓய்வூதியத்திலிருந்து ரூ.50/-பங்களிப்புத் தொகையொன்று ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினரால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி பணத்தை ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதற்கு முன்னர் ஒவ்வொரு ஓய்வூதியம் பெறுநரிடமிருந்தும் விருப்பம் பெறப்பட்டுள்ளதா என்பதையும் ,

(ii) இன்றேல் ஓய்வூதியம் பெறுநர்களின் விருப்பத்துக்கு மாறாக அவர்களது ஓய்வூதியத்திலிருந்து பணம் அறவிடுவதற்கு ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்துக்கு இருக்கின்ற சட்டரீதியான அதிகாரம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) ஓய்வூதியம் பெறுநர்களிடமிருந்து பலவந்தமாக அறவிடப்பட்டுள்ள ரூ.50/- பணத்தை மீண்டும் இவர்களுக்கு வழங்கும்படி ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0012 / '09

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'மிஹின் எயார்' கூட்டிணைக்கப்பட்ட திகதியினையும்,

(ii) அதன் முதலாவது வர்த்தக விமானம் சென்ற திகதியையும்,

(iii) 'மிஹின் எயார்' ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இற்றைவரையிலான அதன் பணிப்பாளர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்ட சம்பளம், மிஹின் விமான சேவையைப் பயன்படுத்த வழங்கப்பட்ட விமானச் சீட்டு, ஏனைய விமானச் சேவைகளைப் பயன்படுத்த வழங்கப்பட்ட விமானச் சீட்டு மேலும் வழங்கப்பட்ட வேறு ஏதாவது நன்மைகள் என்பவற்றை ஒவ்வொரு நபர் அடிப்படையிலும் வருட அடிப்படையிலும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கொடுக்கப்பட்ட வேறு ஏதாவது நன்மைகளையும் மேலும் கொடுக்கப்பட வேண்டிய வேறு ஏதாவது நன்மைகளையும்,

(ii) இயக்கப்பட்ட நாளிலிருந்து மாதாந்த தேறிய இலாபத்தையும் மொத்த இலாபத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0107 / '09

8\.

கௌரவ ஆர்.பீ. ஏ.ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு ரீதியாக இந்நாட்டில் மதுபானங்கள் உற்பத்தி செய்யப் படுகின்றனவா என்பதையும்,

(ii) ஆமெனில் , 2005 ,2006,2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்களின் அளவு எத்தனை லீட்டர்கள் என்பதையும் ,

(iii) எந்த நிருவனத்தினால் வருடாந்தம் எந்தளவிலான மதுபானம் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதையும்,

(iv) மேற்படி ஒவ்வொரு நிருவனம் வருடாந்தம் அரசாங்கத்திற்கு செலுத்தியுள்ள வரித் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா ?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையிலான காலத்துக்குள் மதுபானம் உற்பத்தி அதிகரித்துள்ளதா அல்லது குறைந்துள்ளதா என்பதையும்,

(ii) மேற்படி குறைவு அல்லது அதிகரிப்பு 2005 ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எத்தனை வீதம் என்பாதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0197/ '09

9\.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய தேர்தல் ஆணையாளரின் பெயர் மற்றும் அவர் இப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி என்ன என்பதையும்,

(ii) தேர்தல் ஆணையாளரின் பதவிக்காலம் எப்போது முடிவடைகின்றது என்பதையும்,

(iii) தேர்தல் ஆணையாளரை யார் இப்பதவிக்கு நியமித்தார் என்பதையும்,

(iv) தேர்தல் ஆணையாளரின் பதவிக்கு ஒருவரை நியமனம் செய்ய வேண்டியவர் யார் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0349 / ' 09

10\.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, நாகொடை, பரணதானாயம்கொட கனிஷ்ட வித்தியாலயம் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது,

(ii) மேற்படி பாடசாலைக்குரிய காணியை நன்கொடையாக வழங்கியவர் யார்,

(iii) மேற்படி பாடசாலை மூடப்பட்டு எவ்வளவு காலம் கடந்துள்ளது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கல்விமான் (வண) மாபலகம விபுலசார தேரர் மற்றும் சில ஆளுநர்கள் உட்பட பெருமளவு கல்விமான்களை நாட்டிற்கு வழங்குவதற்கு இப்பாடாசாலை அடிப்படை யாயிருந்ததென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலை மூடப்பட்டுள்ளமையால் குறைந்த வருமானம் பெறும் பெற்றோருக்கு, அதிக பணத்தைச் செலவிட்டு பாடசாலை வான் வண்டிகளின் மூலம் அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்ப நேரிட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) கட்டிடங்கள் உள்ளிட்ட வசதிகளைக் கொண்டுள்ள இப்பாடசாலைக்கு தமது பிள்ளைகளை அனுப்புவதற்கு பெற்றோர்கள் தயாராயுள்ளனர் என்பதால், தேவையான ஆசிரியர்களை வழங்கி எவ்வளவு காலத்தில் மேற்படி பாடசாலையை ஆரம்பிக்க அவர் நடவடிக்கை எடுப்பார்?

(ஈ) இன்றேல், ஏன்?

0108 / ' 09

11.

கௌரவ ஆர்.பி.எ. ரணவீர பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந் நாட்டுக்கு மதுபானம் இறக்குமதி செய்யப்படுகின்றதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின் 2005, 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்ட மதுபான லீற்றர் அளவு எவ்வளவு என்பதையும்,

(iii) அந்த மதுபானத்தை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(iv) இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களினால் வருடாந்தம் கிடைத்த வருமானம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மதுபான இறக்குமதி 2005 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் குறைந்தது அல்லது அதிகரித்துள்ளதா என்பதையும்,

(ii) அந்த அதிகரிப்பு அல்லது குறைவின் நூற்றுவீத அளவு எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0198 / '09

12.

கௌரவ பேமசிறி மானகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் யுத்த செலவுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அந்த பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் பிரதான நிதி மூலம் யாது,

(iii) தேசத்தை கட்டியெழுப்புவதற்கான வரியினூடாக சம்பாதிப்பதற்கு எதிர் பார்க்கும் பணம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

13.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி - உடுகம வீதி மிகவும் பழமை வாய்ந்ததோர் துணை வீதி என்பதையும்,

(ii) தற்போது சில கட்டங்கள் ஊடாக காலி தொடக்கம் தலங்கஹ வரை அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய வீதியில் பஸ்வண்டிகள் உட்பட பெருந்தொகையான வாகனங்கள் நாளாந்தம் பயணிக்கின்றன என்பதையும்,

(ii) இந்த வீதியின் தலங்கஹ தொடக்கம் பஸ் சந்தி வரையிலான பகுதி அதிக வளைவுகளை கொண்டுள்ளதுடன் மிகவும் ஒடுங்கியம் பழுதடைந்த நிலையிலும் காணப்படுவதனால், பயணிக்கும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் சாத்தியக்கூறுகள் அதிகரித்து காணப்படுகின்றது என்பதையும்,

(iii) அதே போன்று, அநாவசியமான தாமதம் ஏற்படுகின்றது என்பதையும்,

(iv) கடந்த காலத்தில் உடுகம நெலுவ வீதி மற்றம் உடுகம அம்பலம் ஊடான யட்டலமன்ன வீதி உட்பட பல வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) தலங்கஹ தொடக்கம் பஸ் சந்தி வரையிலான பகுதயில் மாத்திரம் வீதியை அகலமாக்கி மதகுகளை அமைத்து அதனை அபிவிருத்தி செய்யாமைக்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) வீதியின் மேற்கூறிய பகுதியை அபிவிருத்தி செய்யும் பணி எந்த திட்டத்தின் கீழ் எவ்வளவு காலத்தில் மேற்கொள்ளப்படும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— அம்புலுவாவ திசாநாயக முதியான்சேலாகே ஜயரத்ன மத நிலையம் மற்றும் உயிரியற் பன்வகைத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்,— அம்புலுவாவ திசாநாயக முதியான்சேலாகே ஜயரத்ன மத நிலையம் என அழைக்கப்படும் நம்பிக்கைப் பொறுப்பு நிலையமொன்றையும் உயிரியற் பன்வகைத்தொகுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஒன்றையும் தாபிப்பதற்கும்; அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

பா.24 / '09

2.

கௌரவ மனோ விஜயரத்ன,- பாராளுமன்ற சேவையின் சுயாதீனப் பண்பை வலுப்படுத்துவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

பாராளுமன்றத்தின் சகல செயற்பரப்புகளிலும் பாராளுமன்றச் சேவையின் சுயாதீனப் பண்பை மேலும் வலுப்படுத்துவதற்காக விதந்துரைகள் செய்யப்படவுள்ளதால்,

பின்வருவன தொடர்பில் ஆராய்ந்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கிறது.

(அ) பாராளுமன்ற சேவையின் சுயாதீனப்பண்பை மேலும் வலுப்படுத்துவது; மற்றும்

(ஆ) இதனோடு தொடர்புடைய குழு கருதுகின்றவாறான ஏனைய விடயங்கள்.

(2). (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும், அத்துடன்

(ஆ) 95 ஆம் நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் தெரிகுழு மேலும் நான்கு (04) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3). குழுவானது பின்வரும் தத்துவமுடையதாதல் வேண்டும்,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயித்தல்,

(ஆ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களை முழுமையாகக் கவனத்திற் கொள்வதற்கு அவசியமெனக் குழு கருதக்கூடியவாறாக, அதன் முன்னர் தோன்றும்படி பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் தற்போதுள்ளவர்களான அல்லது முன்னாள் ஆளணியினரை கட்டளையிட்டழைத்தல், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைக் காண்பிக்கும்படி எவரேனுமொருவரைத் தேவைப்படுத்துதல், அல்லது எழுத்திலான அல்லது வாய்மொழி மூலமான அத்தகைய எல்லாச் சான்றுகளையும் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் ஏற்றல்,

(இ) குழுவுக்கு உதவிபுரிவதெற்கென இயைபான துறைகளிலான வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெறுதல்; அத்துடன்

(ஈ) காலத்துக்குக்காலம் இடைக்கால அறிக்கைகளைச் செய்தல், அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து நடாத்திச் செல்லல்.

(4). குழுவானது அத்தகைய எல்லாக் கருமங்களையும் கவனத்திற் கொண்டதன் மேல், குழு தாபிக்கப்பட்டதிலிருந்து ஐந்து (05) மாதங்களினுள் அல்லது, பாராளுமன்றம் அதன் தற்றுணிபின் பேரில் நியமிக்கக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியினுள் அதன் அறிக்கையைப் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்.

*3.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 149, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இருநூறு மில்லியன் (ரூபா 200,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு 149 | — | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆக்கப்பொருட் செலவினம் ரூ. | 200,000,000 |
| | | ரூ. | **200,000,000** |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஜூன் மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 ஆம் 2 ஆம் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 2,749,830,000.

*6.

போக்குவரத்து அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 114, நிகழ்ச்சித்திட்டம் 2 ,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் இரண்டாயிரத்து இருநூற்று தொன்னூற்றியொன்பது மில்லியன் எட்டு இலட்சத்து முப்பதினாயிரம் (ரூபா 2,299.83.மில்லியன்) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

தலைப்பு : 114 — போக்குவரத்து அமைச்சு ரூபா

நிகழ்ச்சித்திட்டம் : 2 — அபிவிருத்தி நடவடிக்கைகள்
மீண்டுவரும் செலவினம் ரூ. 2,299.83 மில்லியன்

ரூ. **2,293.83 மில்லியன்**

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஜூன் மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 இன் குறைநிரப்பும் மதிப்பீட்டின் மொத்தம் ரூபா. 450,000,000.

*7.

ஊழியர் சகாய நிதிய (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*10.

பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*11.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*12.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*16.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*18.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*19.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*20.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*21.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*27.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*28.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

29.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

32.

சிஹல சரண பின் கெட்டய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.